International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# வீதி நாடகங்கள் உணர்த்தும் வேலையில்லாத் திண்டாட்டம்

**க. வீரன்** (சுழல் எண்:222511A007)
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

**முனைவர் ப. நல்லுசாமி**
உதவிப் பேராசிரியர், தமிழாய்வுத் துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, விழுப்புரம்

**ஆய்வுச் சுருக்கம்**

கலை அழகியலை மட்டும் குறிப்பதாக இல்லாமல், கருத்தியலையும் குறிக்கிறது. அத்துடன் கலை உணர்ச்சிகள் தற்காலிக அனுபவங்களாக மட்டுமின்றி, விவாதத்தின் விளைவாகவும், வாழ்க்கை அனுபவமாகவும் பரிணமிக்கின்றன. அதனால்தான் ஒரு கலைப் படைப்பு புரிந்துகொள்ளப்படும் சூழலுக்கேற்ப மகிழ்ச்சி, போற்றுதல், அதிர்ச்சி, கோபம், துக்கம் முதலான அனுபவங்களைத் தோற்றுவிக்கிறது. அதிலும் குறிப்பாகக் காட்சிப்பதிவுகளாக விரியும் நாடகம், சினிமா ஆகியவற்றை உற்று நோக்கும் பார்வையாளன் நேர்மறையான கதாபாத்திரங்களுடன் ஒத்துப்போகிறான். மாறாக எதிர்மறையான பாத்திரங்கள் தோன்றும் பொழுது அதனை, மக்கள் பிரச்சனைகளாவும், சமூகத்தின் குறைபாடுகளாவும் அரசியலாக்கி அதன்வழி தன் கருத்தியலை வெளியுலகத்திற்கு தெரிவிக்கிறான். அவ்வகையில் வீதி நாடகங்கள் பல்வேறு சமூக கருத்துகளைப் பரவலாக்கும் சூழலில் 'வேலையில்லாத் திண்டாட்டம்' என்னும் கருத்தியல் முக்கியமானதாகிறது. அதனை நாடகக் காட்சிகளுடன் இக்கட்டுரை விளக்குகிறது

***Abstract***

Art not only signifies aesthetics but also ideology. Furthermore, artistic emotions evolve not merely as temporary experiences, but also as a result of discussion and as a reflection of life experiences. This is why a work of art evokes experiences such as joy, admiration, shock, anger, and sorrow, depending on the context in which it is understood. Especially in the case of visual narratives like theatre and cinema, the viewer identifies with the positive characters. Conversely, when negative characters appear, the viewer politicizes them as societal problems and shortcomings, thereby conveying their own ideology to the outside world. In this context, while street plays disseminate various social ideas, the ideology of 'unemployment' becomes particularly significant. This article explains this concept with the help of theatrical examples.

**முதன்மைச் சொற்கள்**

நாடகம், வீதி நாடகம், முற்றுப்புள்ளி, சமூக அவலம், உலகமயமாதல், குடும்பச் சூழல், அரசியல் சூழல், வேலையின்மை, வேலையில்லாத் திண்டாட்டம்,

***Keywords***

Drama, Street Play, (Muṟṟuppuḷḷi) Full Stop, Social Injustice, Globalization, Family Environment, Political Environment, Unemployment, Joblessness

முன்னுரை

மனித சமூகம் பொதுவான வாழ்க்கை முறையிலிருந்து சமூக நிகழ்வுகளைப் படிப்பினைகளாக எடுத்துக்கொள்ளும். அவ்வாறு மனிதனின் வாழ்முறைகளைப் படிப்பினைகளாக எடுத்துக் கொள்ளவும், ஆய்வுகள் மேற்கொள்ளவும் படைப்புகள் வழிவகைச் செய்கின்றன. அதற்கான தேவையை இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அச்சு ஊடகத்தின் வருகை, உரைநடையின் செல்வாக்கு, குடியாட்சியின் மீதான மக்கள்எதிர்ப்பு உள்ளிட்ட சமூகவியல் சூழல்கள் உருவாக்கியுள்ளன.

ஆங்கில சமூகவியல் முதலியவற்றின் மொழிபெயர்ப்புகள் 19ஆம் நூற்றாண்டின் தொடங்கியதாக குறிப்பிடப்படும் தகவல்களை இதற்கான சான்றுகளாகக் கொள்ளலாம்.[1] அதன்கீழ், இலக்கியப் படைப்புகளாக மக்களின் குரலைச் சமூக அரசியல் பின்னணியுடம் 'வீதி நாடகங்கள்' வெளிப்படுத்துகின்றன. அதிலும் 'நிகழ்த்து கலைமரபு' சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை உணர்த்தும் அல்லது உரைக்கும் கருத்தியல்கள் சமூகத்தின் உண்மைத் தன்மைக்கான குரல்களாகவும் குறியீடுகளாகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. அதில் வேலையில்லாத் திண்டாட்டம் குறித்த கருத்துகள் இடம்பெறும் விதத்தை இந்த ஆய்வுக் கட்டுரை விவரிக்கிறது.

வீதிநாடகங்கள் காட்டும் வேலையின்மைக்கானச் சூழல்

1980களில் 'உலகமயமாக்கல்' சிந்தனை ஊடுருவியது. உலகமே ஒன்று என்றால் அமெரிக்க நிறுவனம் இந்தியாவில் வியாபரம் செய்யலாம். இந்திய நிறுவனம் சக்தியிருந்தால் அமெரிக்காவில்தொழில் தொடங்கலாம். ஆனால், அதற்கு இங்கு வாய்ப்பிருப்பதாகத் தெரியவில்லை. மாறாக, உலகமயமாதல் என்னும் நுகர்வு சிந்தனை பொருளியல் அளவுகோல் என்று சொல்லப்படும் ஜி.டி.ப்பியின் ஒட்டுமொத்த உற்பத்தி, சேவை, ஏற்றுமதிக்கான மதிப்பு, நாட்டு வளர்ச்சியைக் கணித்தல் என்றாகிறது. இதன் இலக்கு 'முழு வேலைவாய்ப்பு' என்னும் குரலே மேலோங்கச் செய்கிறது. ஆனால் இந்தியாவில் அதற்கும் வழியில்லை. ஏனெனில் இங்கு தனிநபர் வருமானம் என்ற அளவுகோல் மூலம் வறுமை தலைவிரித்து ஆடுகிறது. அதனால் வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகள் என்ற வகைமைக்குள் இந்தியா வளரும் நாடுகளில் ஒன்றாக இருக்கிறது. வளரும் பொருளாதாரத்தில் வறுமையும் ஏற்றத்தாழ்வும் அதிகம். திட்டமிட்ட தொழில் வளர்ச்சி, கார்ப்பரேட் நிறுவனங்களின் வளர்ச்சி, ஏற்றுமதி ஆகியவற்றின் பலன் இங்கு (இந்தியாவில்) ஏழைகளை அடையத் தாமதமாகிறது என்று சொல்லிக்கொண்டு – ஏழைகள் மேலும் ஏழைகளாக 'வாழ்வாதாரத்தை இழக்கும்' நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இதற்காகக் குரலை பிரளயனின் 'எதிர்ப்பாட்டு' மற்றும் 'முற்றுப்புள்ளி" எனும் நாடகங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அந்நாடகங்களில் இடம்பெறும்,

**நான் முதல்ல ஒரு கம்பெனியில சேல்ஸ்மேனா இருந்தேன். அப்புறம் ஒரு மளிகை கடையில கணக்கு எழுதுனேன். கொஞ்சநாளு லிப்ட் ஆபரேட்டரா இருந்தேன். அப்புறம் பேப்பர் போட்டேன். இப்ப சினிமா போஸ்டர் ஒட்டுறேன். நேத்து ராத்திரி கூட உங்க புதுப்படத்தோட போஸ்டரத்தான் ஒட்டுனேன் மேடம். எம்.ஏ. படிச்சிருக்கேன். நிரந்தரமான எந்த வேலையும் இல்ல. என்ன மாதிரி படிச்சிட்டு பலகோடி பேரு இந்த நாட்டில எம்ப்ளாய்ன்மெண்ட் எக்ஸ்சேஞ்ல பதிவு பண்ணிட்டு வேலைக்காக காத்திட்டு இருக்காங்க. இந்த மாதிரி வேலை இல்லாதவங்கள பத்தி இந்தியாவை ஆளுற எவனும் இதுவரைக்கும் ஒரு கட்டை மசுரும் புடுங்கினதில்ல மேடம்**[2]

என்னும் வேலு கதாப்பாத்திரத்தின் கோபம் நியாயமானதாகவும், இந்திய சூழலில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் செயலாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

முற்றிப்புள்ளியில் வேலையின்மைப் பதிவு

'முற்றுப்புள்ளி' எனும் நாடகம், பிரெக்ட் குறிப்பிடும், 'Show the Showing' 'காண்பித்தலைக் காண்பித்தல்' என்ற 'நாடக உத்தி'யில் அமைக்கப்பட்ட நாடகமாகிறது. 1987ஆம் ஆண்டு யுனெஸ்கோ 'சர்வதேச இளைஞர்கள் ஆண்டாக' அறிவிக்கிறது. அது வேலையில்லாத் திண்டாட்டம் கடுமையாக இருந்த காலகட்டமாகும். அப்பொழுது, சென்னை எழும்பூரில் காவல் துறைக்கான ஆள் எடுப்பின்போது கூட்ட நெரிசலில் ஒரு இளைஞன் இறந்து போகும் சம்பவம் நிகழ்கிறது. அந்நிகழ்வை மையப் படுத்தி 'முற்றுப்புள்ளி' என்ற வீதி நாடகத்தைப் பிரளயன் அரங்கேற்றியுள்ளார்.

பொதுவாக, வீதி நாடகங்கள் என்றால் 20 நிமிடங்கள் எனக் குறுகிய அளவில் இருக்கும். ஆனால் இந்நாடகத்தில் இறந்துபோன இளைஞனின் இருத்தல் சார்ந்த பிரச்சனையை,

அவன் வாழ்வியலோடு இணைத்துப் பதிவு செய்ய வேண்டிய தேவை இருப்பதை உணர்ந்து, இந்நாடகம் நிகழ்த்தப்பட்டுள்ளது. இந்நாடகத்தில் இடம்பெறும் பல்வேறு காட்சியமைப்புகள் வேலையில்லாத் திண்டாட்டத் தின் கொடுரங்களை விவரிப்பதாக அமைந்திருக் கின்றன. உதாரணமாகக் கீழ்க்காணும் குறிப்புகளைக் காணலாம்.

**நான் வேலைக்கு போயி சம்பாதிச்சு... எங்க அம்மாவுக்கு கண் ஆப்ரேஷன் பண்ணுவேன்.! என்னோட ரெண்டு அக்காவுக்கும் கல்யாணம் பண்ணிவைப்பேன்..! என் தம்பிய டாக்டருக்கு படிக்கவைப்பேன்..! எங்கம்மா தாலிய அடகு கடையில இருந்து மீட்டுட்டு வருவேன்..![3]**

என்று படித்து முடித்த இளைஞர்கள் கனவுப் பகுதிவாக வரும் குரல்கள் 'வேலையில்லாச் சூழலை' விளக்குகின்றன. அதேபோல,

**“தமிழ்நாடு ப்பளிக் சர்வீஸ் கமிஷன்.. காலியிடங்கள் ஏழாயிரம்..! பரிட்சைக்கான விண்ணப்பங்கள் விலை பத்து ரூபாய்.. பத்து ரூபா.. பத்தே ரூபா...**

**பேங்கிங் சர்வீஸ் ரெக்ரூட்மெண்ட் போர்ட். காலி இடங்கல் இரண்டாயிரம், பரிட்சைக்கான விண்ணப்பங்கள் விலை பதினைந்து ரூபாய்..! பதினைந்து ரூபாய்.. பதினைந்தே ரூபாய்.. ...**

**ரயிவே சர்வீஸ் கமிஷன்.. பதினைந்து ரூபா**

**ஸ்டாப் செலக்ஷன் கமிஷன் பத்து ரூபா**

**யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இருபது ரூபா**

**அந்த சர்வீஸ் கமிஷன் இருத்தஞ்சு ரூபா**

**இந்த சர்வீஸ் கமிஷன் முப்பது ரூபா**

**மண்ணாங்கட்டி சர்வீஸ் கமிஷன் முப்பது ரூபா**

**தெருப் புழுதி சர்வீஸ் கமிஷன் முப்பத்தஞ்சு ரூபா..**

**போனா வராது.. பொழுது போனா கிடைக்காது**

**போடு.. பத்து ரூபா... போடு பதினைந்து ரூபா..[4]**

என்று வரும் விளம்பரங்களும் விண்ணப்பங் களும் படித்த இளைஞர்களை ஏமாற்றக் கூடியதாக இருக்கின்றன. இதனால் இளைஞர் களுக்கு அவர்தம் பெற்றோர்களுடனான வெறுப்பு அதிகரிக்கிறது. சமூகத்தினிடையே வெறுப் புணர்ச்சி வளர்த்தெடுக்கப்படுகிறது. இதனை,

**நாற்..இளை: டேய் மாமா.. இன்னைக்கு எங்க வீட்ல பெரிய**

**தகராறுடா..**

**இளைஞர் 2 : போடா.. .. ஏதோ புதுசா சொல்ல வந்துட்டான்..**

**நாற்.இளை : அதில்லடா.. இதைக் கேளேன். இன்னைக்கு**

**எங்கம்மாவை எட்டி உதைச்சிட்டேன்.!**

**இளைஞர்கள்: அடப்பாவி..!**

**நாற்.இளை : பின்ன என்னடா மாமு.. .. எப்ப பாத்தாலும்**

**தண்டச்சோறு.தண்டச்சோறுன்னு**

**சொல்லிக்கிட்டு இருந்தா..? அதான் இன்னைக்கு**

**உட்டேன் ஒரு உதை..![5]**

என்றுவரும் உரையாடல் விளக்குகிறது. இந்த இளைஞனின் ஆழ்மனம் அம்மாவை உதைக்க வேண்டும் என்று நினைக்கக் கூடியதாக இல்லை. இருந்தாலும் இயலாமையைப் புரிந்து கொள்ள முடியாத சூழலால், அவன் அவ்வாறு நடந்துகொள்கிறான். அதே இளைஞன், தன் நண்பர்களுடன் மது அருந்தியதும்,

**டேய்.., டேய்..! எங்கம்மாவை எட்டி உதைப் பேன்னு நான் கனவும் நினைச்சதில்லடா.. நான் எப்படிடா..? வீட்டுக்குப் போய் எங்கம்மா முகத்துல முழுப்பேன்.. எனக்கு ஏண்டா இந்த கதி..[6]** என்று சொல்லி புலம்பியவாறு அழுகிறான். இக்காட்சியில் வரும் இளைஞனைப் போலத்தான், இன்று பலரும் இருந்துவருகின்றனர் என்பதை நாம் உணரலாம்.

ஆயிரம் வேலைவாய்ப்புகள் இருப்பதாக பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கான அறிக்கைகளும் விளம்பரங்களும் விண்ணப்பங்களும் தெரிவித் தாலும் அவற்றின் வழியே சரியான முறையில் இன்றைய இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு கள் வழங்கப்படவில்லை என்பதையே இக்காட்சிப் பதிவு விளக்குகிறது. அதேபோல, நகர்ப் புறங்களிலும் சந்தை நிறுவனங்களால் வழங்கப் படும் ஒருசில வேலை வாய்ப்புகளிலும் தலித்துக் களுக்கும், இடைநிலைச் சமூகத்தினருக்கும் வாய்ப்புகள் வழங்கப்படுவதில்லை. அப்படியே வழங்கப்பட்டாலும், குறைந்த சம்பளத்திலான வேலைகள்தான் அங்கு வழங்கப்படுகின்றன. இதில் பெரும்பாலும் கட்டுமான தொழிலாளர்கள், வீட்டுவேலை செய்யக் கூடியவர்கள் போன்றோர் இடம் பெறுகின்றனர். இவர்களின் வேலைச் சுமையும் முறைசாரா வேலைச் சுமையாகவே இருந்துவருகிறது. இந்த அளவில் கூட வேலையில்லாதவர்கள் பலர், இன்னும் தெரு ஓரங்களில் கூடாரம் அமைத்து வாழ்க்கின்றனர்.

இன்னும் சிலர் பூங்காக்கள் அல்லது நகரங்களில் பொது இடங்களில் பிச்சை எடுத்து பிழைப்பு நடத்துகின்றனர். இத்தகைய அவலத்திற்கும் நெருக்கடிகளுக்கும் இங்கு நிலவும் பொருளாதாரச் சுரண்டல், நுகர்வுக் கலாச்சாரம், இலஞ்சம் ஊழல் உள்ளிட்ட அரசியலாதிக்கம் ஆகியவற்றுடன் 'சாதிய அடிப்படையிலான' பிரிவினைவாதம் ஆகிய முக்கிய காரணிகளாக அமைந்திருப்பதைக் காணலாம். இதனை விளக்கும் விதமாக,

**மஞ்சள் : பிள்ளைகளே.. பாரம்பரியப் பெருமை உடையவர்கள்**

**நாம். அரசவையிலே மன்னனுக்கு இணையாக அமர்ந்திருந்தவர்கள் நாம். ஏன்? பல ராஜ்யங்களுக்கு அதிபதிகளாக இருந்தோம். ஆண்டோம்..! ஆனால் இன்று இந்த நிலைமை..? இந்த மாநிலத்தில் பெரும்பான்மை சமுதாயமானவர்கள் நாம். நமது ஜாதியில் அமைச்சர்களோ குறைவு. எம்.எல்.ஏக்களோ மிகவும் சொற்பம். விரல்விட்டு எண்ணி விடலாம். ஏன் இந்த பாரபட்சம்..? நாற்பது சதவீதமுள்ள நமக்கு நாற்பது சதவீத ஒதுக்கீடு வேண்டும். இதைவிடக் கூடாது. தண்டவாளத்தைப் பேப்போம்..! பஸ்ஸை கவிழ்ப்போம். நீதி பெறுவோம்..**

**காவி:பிள்ளைகளே.. இந்த மாநிலத்திலுள்ள எந்த சமுதாயத்தினருக்கும் குறைந்தவர்களல்ல நமது சமுதாயத்தினர். வேலை வாய்ப்பில் இட ஒதுக்கீட்டில் நாம் என்றுமே ஒதுக்கப்பட்டு வருகிறோம். பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறோம். நமக்குள்ள நியாயமான பங்கை போராடிப் பெறுவோம். பாலத்தைத் தகர்ப்போம். பஸ்ஸைக் கொலுத்துவோம்.. போராடுவோம்..[7]**

என்றவாறு 'மஞ்சள்' 'காவி' எனும் குறியீட்டு அடையாளங்களுடன் சாதிக்கு ஒரு தலைவர்களும், அவர்களுக்கென சில இளைஞர்களும் ஒன்று திரண்டு, போராட்டக் களத்தில் இழுத்து விடப்படும் அவலம் காட்சிப் படுத்தப்படுகிறது. இதனால் தொடர்ந்து வேலையில்லாத் திண்டாட்டம், பஞ்சம் - பசி, இடஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு சமூக பிரச்சனைகளுக்குச் சரியான தீர்வு காண வேண்டிய – சூழல் இயல்பாக மாற்றியமைக்கப்பட்டு – மாறாக இளைஞர்கள் பலர் குற்றவாளிகளாகவும், சிலர் தண்டனை உரியவர்களாகவும் மாறும் அபாயம் நேர்கிறது.

கல்விக்காகக் காலத்தையும் இருக்கும் பணத்தையும் அழித்துக்கொண்டு, பட்டங்கள் பெற்ற நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பாலானோர், படித்த வேலைக்குச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்திலும், வேறு உழைப்பதற்கான வேலைகள் ஏதும் தெரியாத அனுபவமில்லாத சூழலாலும் அரசுத் துறை சார்ந்த வேலைகளைத் தேடுவதில் அதிக கவனம் செலுத்துகின்றனர். அதற்கான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். சமீப காலங்களில் பிற்படுத்தப்பட்டவர்களும், தலித்துகளும், பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பவர்களும் அரசு வேலைக்கான தேர்வுகளுக்குத் தயாராவதையும், அதற்கான செலவுகளைச் செய்து வருவதையும் பார்க்க முடிகிறது. இம்மாதிரியான இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கான மாற்றிக்கொள்ள அவர்களுக்கு தெரிந்த ஒரேவழி அரசு வேலைவாய்ப்பாகத்தான் இருக்கிறது. மற்ற எல்லா துறைகளும் கதவுகளை மூடி இவர்களை வெளியே துரத்திவிடுகின்றன. இச்சூழலில் அரசுப் பணி சேர்க்கையில் நடக்கும் நாடகத்தனமான விளம்பரங்களும், விண்ணப்பங்கள் அனுப்பச் சொல்லி மொத்தமாக ஏமாற்றத்தில் விடும் சூழலும் பெரும்பாலான இளைஞர்களைக் கவலையில் ஆழ்த்துகிறது. இதன் விளைவால் அவர்களில் சிலர் அழிவு பாதையை நோக்கிச் செல்கின்றனர். இன்னும் சிலர் தற்கொலை முயற்சிகளுக்கு ஆளாகின்றனர். இத்தன்மையை,

**நிர்மலா எனும் ஒரு பெண்ணை காதலித்த இளைஞனுக்கு அரசாங்க வேலை இல்லை என்று சொல்லி, அந்த பெண்ணின் குடும்பத்தார் அவளை வேறொரு ஆண்மகனுக்கு திருமணம் செய்துவிடுகின்றனர். அந்த பெண்ணும் அவரோடு வாழவழியின்றி இரண்டு மாதங்களில் தற்கொலை செய்துகொள்கிறாள். அதைக் கேள்வியுற்ற இளைஞன் 'மனநலம்' பாதிக்கப் பட்ட சூழலுக்கு தள்ளப்படுகிறான். அவன் சரியான சிந்தனையில் இருந்தாலும், அவனைச் சுற்றியுள்ள சமூகம் அவனை 'மனநோயாளி' என்றே சித்தரிக்கும் தன்மையை[8]**

ஒரு காட்சியாக பிரளயன் விளக்கியுள்ளார். அதில் 'உத்தியோகம் புருஷலட்சனம்' என்று சொல்லி இதுபோல இந்தியாவில் எத்தனையோ கோடி இளைஞர்கள் 'புருஷ லட்சனத்திற்கு உரியவர்களாக இல்லாமல்' இருந்துவரும் அவலத்தை விவரிக்கிறார். அதுபோல, குடும்ப உறவுகளுக்குள் ஏற்படும் விரிசல்கள், ஒழுக்கம் தவறிய இளைஞர்களின் சமகாலப் போக்கு, கணவன் - மனைவிக்கு இடையிலான பிரிவினை

கள், மூடநம்பிக்கையில் ஆழ்ந்துவிடும் சூழல், கொலை, கொள்ளை, தற்கொலைகள் முதலான பல்வேறு சமூகக் குற்றங்களுக்கும் ‘வேலை வாய்ப்பு’ இல்லாதச் சூழல் அடிப்படைக் காரணமாக இருப்பதைச் சுட்டிக்காட்டி ‘கலி காலத்தில் மேற்கண்ட தவறுகள்’ நடப்பதாகச் சொல்லிக்கொண்டு இருக்கும் சில மேல்தட்டு மக்களின் குரல்களுக்குப் பதிலடி தருவதாக ‘முற்றுப்புள்ளி’ நாடகத்தின் காட்சியமைப்புகளும் ‘கருத்தியலைப் பேசும் உரையாடல்களும்’ அமைந்திருக்கின்றன. இந்நிலை மாற ஒரே தீர்வாக,

**நாம் ஒரு லட்சம் பேர் வேலைக்காக மனுச்செய்தால் 8000 பேருக்குத்தான் வேலை தருவேன் என்கிறது அரசாங்கம். நீங்களோ அந்த எட்டாயிரம் பேருக்கு கிடைக்கும் வேலை யில் உனக்கு, எனக்கு என்று பங்கு பிரிக்கின்றீர்கள். அந்த எட்டாயிரம் பேர் போக மற்றவர்கள் கதி என்னவாவது..? அப்படியே நீங்க கேட்ட ஒதுக்கீடு உங்களுக்குக் கிடைத் தாலும் உங்கள் சமுதாயத்தினர் அனைவருக்கும் வேலை கிடைத்து விடுமா..? நாம் ஏன் எல்லோருக்கும் வேலை வேண்டும் என்று கேட்கக் கூடாது..? அதற்காக நாம் ஏன் போராடக்கூடாது**[9]

என்ற கேள்வியை முன்வைத்து, சாதியாகவும் மதமாகவும் கலாச்சாரமாகவும் பல்வேறு சிக்கல்களுக்குள் சிக்குண்டு இருக்கும் நம்மை, முன்னிறுத்தி, நமக்கான அரசும், பொது நிறுவனங்களும், தொழில் நிறுவனங்களும் 200க்கும் மேற்பட்ட அந்நிய நிறுவனங்களுடன் நேரடியாக நிதிஉதவி பெற்றுக்கொண்டு, நம் பிரிவினைவாதப் போக்கை வளர்த்துவிடுகின்றன. இதனை புரிந்துகொண்டு எல்லா மொழியிலும் ஒரே பொருளைக் குறிக்கக் கூடிய பசியைப் போக்குவதற்கும், அதற்கான வேலையைப் பெறுவதற்கும் ஒன்றுபட வேண்டும் என்ற சிந்தனையை வெளிப்படுத்துகிறார். நம்மில் நிகழ இருக்கும் இந்த ஒற்றுமைக்காகப் போராடி மறைந்த – துப்பாக்கிச் சூட்டால் காலமான பல்வேறு தலைமைகளின் பெயர்களையும் அவர்தம் வரலாறுகளையும் சுட்டிக் காட்டி –

**இந்த மிதிபடும் வாழ்வை மூடி மறைத்துகொள்ள பழகிவிடாமல் – மோதி மிதிக்கப் புறப்பட வேண்டும்**[10] என்று சூலுரைப்பதாக நாடகம் நிறைவுறுகிறது.

## முடிவுரை

சமூகத்தின் அடித்தளப் பிரச்சனைகளை அரசியலாக்காமல் உணர்ச்சிபூர்வ சொல்லாடல் கள் மூலம் மக்களைத் திரட்டி, அதையே உண்மை என நம்பவைத்து வரும் அதிகார, அரசியலின் முகத்தில் அறைந்த கள யார்த்தமாக ’வீதி நாடகங்கள்’ அமைந்திருக் கின்றன. அதில் சென்னை, எழும்பூரில் 1980 களில் காவல் துறைக்கான தேர்ச்சியின் பொழுது ஏற்பட்ட கூட்ட நெரிசலில் இறந்துபோன இளைஞனை மையமிட்ட சம்பவமாக ‘முற்றுப் புள்ளி’ நாடகத்தை அமைந்திருக்கிறது. இதில் வேலையில்லாதத் திண்டாட்டதால் - குடும்ப உறவுகளுக்குள் ஏற்படும் விரிசல்கள், ஒழுக்கம் தவறிய இளைஞர்களின் சமகாலப் போக்கு, கணவன் - மனைவிக்கு இடையிலான பிரிவினை கள், மூடநம்பிக்கையில் ஆழ்ந்துவிடும் சூழல், கொலை, கொள்ளை, தற்கொலைகள் முதலான பல்வேறு சமூகக் குற்றங்கள் நடப்பதுச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. நா. சந்தானகிருஷ்ணன்., (மொ.பெ.)., சமூக உளவியலுக்கு ஓர் அறிமுகம்., பா-1., ப.22
2. பிரளயன்., எதிர்ப்பாட்டு., ப.12 (வீதி நாடகம்)., கேளுங்களேன் கேளுங்களேன்..எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டம், வாலண்டரி ஹெ;த் சர்வீஸஸ் வெளியீடு, அடையாறு, சென்னை–113 (2003)
3. பிரளயன்., முற்றுப்புள்ளி., ப.73 (வீதி நாடகம்)., கேளுங்களேன் கேளுங்களேன்..எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டம், வாலண்டரி ஹெ;த் சர்வீஸஸ் வெளியீடு, அடையாறு, சென்னை–113 (2003)
4. மேலது., ப.74
5. மேலது. (Ibid.)
6. மேலது., ப.75
7. மேலது. (Ibid.)
8. மேலது., ப.76
9. மேலது. (Ibid.)
10. மேலது. (Ibid.)